# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**நிலையறிபரீட்சை – 2021**

## நாடகமும் அரங்கியலும் I,II

| | | |
|---|---|---|
| பெயர் ∴ சுட்டெண் :- ………………… | தரம் :- 9 | நேரம் :- 2 மணித்தியாலம் |

பகுதிI

1. பின்வரும் விடயங்களில் ஒருபாத்திரத்தின் 'சமூகவியல் பண்பாக' கூறக்கூடியது
   (1) உடல் தோற்றம் (2) குரல்வெளிப்பாடு
   (3) பாத்திரத்தின் தொழில் (4) குணவியல்பு

2. 'பாத்திர வகிபாகம்' என்ற பதம் பற்றிய மிகப் பொருத்தமான கூற்று
   (1) ஒருபாத்திரத்தின் பண்புகள் (2) பாத்திரத்தின் பௌதீக வெளிப்பாடுகள்
   (3) பாத்திரத்தின் பல்வேறு நிலமைகள் (4) பாத்திரமாக நடிகன் நடித்தல்

3. ஒரு பாத்திரமொன்றின் பண்பினை வெளிப்படுத்துவதில் துணைபுரியும் அரங்க கூறுகளில் பொருத்தமற்றது
   (1) செயல்கள் (2) சொல்லாடல்கள் (3) வேட உடை (4) அரங்க வெளி

4. ஆஹார்யாபிநயம் எனக்குறிப்பிடப்படுவது
   (1) குரல்வழிச் சித்திரிப்ப (2) உடல் வழிச் சித்திரிப்பு
   (3) உணர்ச்சிவழிச் சித்திரிப்பு (4) காண்பியவழிச் சித்திரிப்பு

5. பின்வருவனவற்றில் வகுப்பறைகளில் இருந்தே விளையாடத் தக்க அரங்க விளையாட்டு
   (1) ஆடும் வீடும் (2) சின்னப் பானை பெரிய பானை
   (3) காகம் உயர் பெறுதல் (4) பழக்கலவை

6. கரடியும் கிராம மக்களும் என்ற அரங்க விளையாட்டு
   (1) உளச் சமநிலைக்கானது (2) உடல் சமநிலைக்கானது
   (3) குரல் சமநிலைக்கானது (4) உடல் உறுதிக்கானது

7. தொல்காப்பியத்தில் கூறப்படுகின்ற 'மெய்ப்பாடு' என்பதற்கு பொருத்தமாக நாட்டிய சாஸ்திரம் கூறும் விடயம்
   (1) அபிநயம் (2) பாவம் (3) ரஸம் (4) முத்திரைகள்

8. நாடக எழுத்துருவின் இன்றியமையாத அம்சமாகக் கருதப்படுவது
   (1) காட்சியமைப்பு (2) நடிகன் (3) செயல்கள் (4) மோதுகை

9. பின்வருவனவற்றில் அரங்கின் துணைக் கலைகளுக்குள் அடங்காதது
   (1) வேட உடை (2) காட்சிவிதானிப்பு (3) ஒளியமைப்பு (4) நடிப்பு

10. அரங்கின் காண்பிய மூலகமாக அமைவது
   (1) இசை (2) காட்சியமைப்பு (3) சொல்லாடல்கள் (4) பாடல்



kalvi.lk

11. பின்வருவனவற்றில் வாழ்வியல் சடங்காகக் கொள்ளக்கூடியது
(1) திருமணச்சடங்கு (2) சூரன்போர் (3) குளிர்த்தி சடங்கு (4) பாஸ்குசடங்கு

12. பின்வருவனவற்றில் 'நாடக வகைமை' யாகக் கொள்ள முடியாதது
(1) யதார்த்த நாடகம் (2) சமயநாடகம் (3) சிறுவர் நாடகம் (4) வரலாற்று நாடகம்

13. பின்வரும் துணைக்கலைகளில் பாத்திரத்தின் உணர்வு வெளிப்பாட்டுக்கு அதிகம் துணைபுரியக்கூடியவை
(1) அரங்கவெளி, பார்ப்போர் (2) வேட உடை உப்பனை
(3) காட்சி, மேடைப்பொருள் (4) இசை ஒளி

14. அதிகாரத்தன்மையான பாத்திரமொன்றில் காணப்படக்கூடிய இயல்பு
(1) அதிக புன்னகை (2) கூனி நடத்தல்
(3) அதிகம் பேசாமை (4) தளர்ச்சியான நடை

15. எந்தவித முன்னாயத்தமும் இன்றி உடனடியாகச் சித்திரிக்கப்படுவது
(1) ஊமம் (2) புதிதளித்தல் (3) ஆற்றுகை (4) நடனம்

16. பின்வருவனவற்றில் வேட உடையினூடாக வெளிப்படுத்த முடியாதவை
(1) பாத்திரத்தின் வயது (2) பாத்திரத்தின் பால்
(3) சமூக அந்தஸ்து (4) பாத்திர உணர்வுகள்

17. உலக நாடக தினம் கொண்டாடப்படுவது
(1) பெப்ரவரி 27 (2) மார்ச் 21 (3) மார்ச் 27 (4) யூலை 23

18. 'அரசனின் புத்தாடை' நாடகத்தினை எழுதியவர்
(1) மாவை நித்தியானந்தன் (2) குழந்தை ம. சண்முகலிங்கம்
(3) சி.மௌன குரு (4) சி. ஜெய்சங்கர்

19. இப்படத்திலுள்ள நாடக ஆசிரியர் எழுதிய நாடகம்
(1) அரசனின் புத்தாடை (2) கண்டறியாத கதை
(3) சங்கிலி (4) பூனைகளின் இராச்சியம்



20. இப் படத்திலுள்ள நாடகவகை



(1) சிறுவர் நாடகம் (2) வரலாற்று நாடகம்
(3) சமூக நாடகம் (4) நவீன நாடகம்

(20 X 2 =40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி -11

முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு விடைதருக ?

1.

1. கட்புல செவிப்புலக்கலை ஒன்று தருக ?
2. ஆங்கிகாபிநயம் என்பது யாது?
3. வெற்றி தோல்வியின்றி விளையாடத் தக்க அரங்க விளையாட்டு ஒன்று தருக?
4. பரத முனிவர் ரஸங்களை எத்தனையாகப் பிரித்துள்ளார் ?
5. நடிகன் உணர்வினை பாரப்போருக்கு வெளிப்படுத்துகின்ற மிகமுக்கியமான உறுப்பு யாது?
6. சுதேச வாழ்வியல் சடங்கு ஒன்றின் பெயர் தருக?
7. சடங்கில் காணப்பெறும் நாடகப்பண்பு ஒன்று தருக ?
8. மோதுகை என்றால் என்ன?
9. நாடகத்தில் நடிகன் பயன்படுத்தும் துணைக்கலை ஒன்றினைத் தருக?
10. நாடக மோடிகள் இரண்டு தருக?
11. தரம் 9 இல் நீர் கற்ற வரலாற்றுக் கதைகள் இரண்டின் பெயர்தருக?

(12 புள்ளிகள்)

2.
1. பாத்திரம் என்பதன் பொருள் யாது ? (4 புள்ளிகள்)
2. பாத்திரத்தின் பண்பு வெளிப்பாடுகள் எவை ? (4 புள்ளிகள்)
3. நால்வகைச் சித்திரிப்புக்களையும் தருக ? (4 புள்ளிகள்)

3.
1. ‘பாத்திர ஒன்றிப்பு’ என்றால் யாது ? ( 3 புள்ளிகள்)
2. ‘வகிபாகச் சித்திரிப்பு’ என்றால் என்ன ? (3 புள்ளிகள்)
3. நீர் விரும்பிய ஒரு கதாபாத்திரத்தின் வகிபாகங்களை இனங்காட்டி விளக்குக? (6 புள்ளிகள்)

4.
1. அரங்க விளையாட்டு என்றால் என்ன? (3 புள்ளிகள்)
2. அரங்க விளையட்டுகள் 6 தருக ? (3 புள்ளிகள்)
3. அரங்க விளையாட்டின் பயன்களை விபரிக்குக? (6 புள்ளிகள்)

5.
1. சடங்கு என்றால் என்ன ? (3 புள்ளிகள்)
2. சதேச வாழ்வியல் சடங்குகள் 3 தருக? (3 புள்ளிகள்)
3. நீர் பார்த்த வாழ்வியல் சடங்கு ஒன்றினை குறிப்பிட்டு அதில் காணப்படும் 6 செயல்களைத் தருக? (6 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றுக்கு சிறுகுறிப்பு எழுதுக.?

1. வரலாற்று நாடகம்
2. சிறுவர் நாடகம்
3. நாடக மோடிகள்
4. நாடகத்தின் துணைக் கலைகள் (3 X 4 =12 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community | Whatsapp Channel | Facebook Page